DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 117/ 2021 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 2 |
| Name | திரு. இசக்கிபாண்டி |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | ஓய்வு பெற்ற சிறப்பு உதவி ஆய்வாளர். |
| Religion | |
| Age | |

<u>( எதிரி ஆஜரில்லை: எதிரிதரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )</u>

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 27-05-2026.(நேரம்: 04.01 PM )**

**( சாட்சி காணொலி காட்சி மூலம் விசாரிக்கப்படுகிறார்)**

**<u>முதல்விசாரணை</u>**

1.நான் தமிழ்நாடு காவல் துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி ஓய்வுபெற்று தற்போது திருச்செந்தூர் தாலுகாவில் குடியிருந்து வருகிறேன்.

2. இதற்கு முன்பாக செய்துங்கநல்லூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது கடந்த 19.01.2019 ஆம் தேதி மதியம் 02.00 மணியளவில் நானும், காவலர் ஆனந்தராஜும் உத்தரவுபடி கால்வாய் விலக்கு திருநெல்வேலி டு திருச்செந்தூர் மெயின்ரோட்டில் வாகன தணிக்கை செய்துக்கொண்டிருந்தபோது இவ்வழக்கின் எதிரி மணி என்ற மணிகண்டன் என்னை "தேவடியா மவனே" என்று அசிங்கமாக ஏசி அருவாளை காட்டி என்னை மிரட்டினார்.

3.நானும், காவலர் ஆனந்தராஜும் அவரை விரட்டி சென்றபோது மீண்டும் எங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார்.

4.காவல் துறை பணியை செய்ய முடியாமல் தடுத்ததாலும், கொலை மிரட்டல் விடுத்ததாலும், எதிரி மணி என்ற மணிகண்டன் மீது செய்துங்கநல்லூர் காவல் நிலையத்தில் தனி அறிக்கையை சமர்ப்பித்தேன்.

5. என்னிடம் காட்டப்படும் தனி அறிக்கைதான் நான் கொடுத்தது. **அந்த தனி அறிக்கை அசாஆ 1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

6. இதனால் அசிங்கமாக இவ்வழக்கின் எதிரி என்னை பேசியதாலும், அரசு பணியை செய்யவிடாமல் தடுத்ததாலும், கொலை மிரட்டல் விடுத்ததாலும் எனக்கு மன உளைச்சல் ஏற்பட்டது.

7.இது தொடர்பாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை (நேரம் 04.10PM)**

இல்லை

சாட்சியின் வாக்குமூலம் காணொலி காட்சி திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

ஒ/ம் ராமசங்கரன்
நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.

DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 117/ 2021 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 3 |
| Name | திரு. ஆனந்தராஜ் |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | தலைமை காவலர், பெண்கள் குற்ற தடுப்பு பிரிவு , திருநெல்வேலி மாவட்டம். |
| Religion | |
| Age | |

<u>( எதிரி ஆஜரில்லை: எதிரிதரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )</u>

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 27-05-2026.(நேரம்: 04.10 PM )**

**( சாட்சி காணொலி காட்சி மூலம் விசாரிக்கப்படுகிறார்)**

**<u>முதல்விசாரணை</u>**

1.நான் தற்போது திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பெண்கள் குற்ற தடுப்பு பிரிவில் தலைமை காவலராக பணி செய்து வருகிறேன்.

2. இதற்கு முன்பாக செய்துங்கநல்லூர் காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக நான் பணியில் இருந்தபோது கடந்த 19.01.2019 ஆம் தேதி மதியம் சுமார் 14.00 மணியளவில் நானும், SSI திரு இசக்கிபாண்டியும், செய்துங்கநல்லூர் உட்கோட்ட திருநெல்வேலி டு திருச்செந்தூர் ரோட்டில் உள்ள கால்வாய் விலக்கில் வைத்து வாகன தணிக்கை செய்துக்கொண்டிருந்தபோது அப்போது மெயின் ரோட்டில் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வந்துக்கொண்டிருந்த TN37CS 0513 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த ஏற்கனவே நன்கு

பரிட்சயமான பல குற்ற வழக்குகளில் சம்மந்தப்பட்ட மணி என்ற மணிகண்டன் எங்களை பார்த்து "போலிஸ்கார தேவடியா மக்களா,கிட்ட வந்தால் உங்களை கொல்லாமல் விடமாட்டேன்" என்று கொலை மிரட்டல் விடுத்தார். நாங்கள் அவரை சுதாரித்து பிடிக்க முயலும்போது எதிரி மணி என்ற மணிகண்டன் அந்த இடத்தில் இருந்து கெட்ட வார்த்தைகள் பேசியும், எங்களது அரசு பணியை தடுத்தும், எங்களை அசிங்கமான வார்த்தைகளால் ஏசி கடமையை செய்ய விடாமல் இடையூறு செய்து,எங்களை தாக்க வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் அருவாளை காட்டி மிரட்டியதால் எங்களுக்கு மன உளைச்சல் ஏற்பட்டது.

3. பின்னர் நாங்கள் நிலையம் வந்து 14.45 மணிக்கு இவ்வழக்கின் எதிரி மணி என்ற மணிகண்டன் மீது நடவடிக்கை எடுக்க SSI திரு. இசக்கிபாண்டி மூலம் தனி அறிக்கையை தயார்செய்து உதவி ஆய்வாளர் அவர்களிடம் புகார் கொடுத்தார்.

4.இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை (நேரம் 04.20PM)**

இல்லை

சாட்சியின் வாக்குமூலம் காணொலி காட்சி திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

ஒ/ம் ராமசங்கரன்
நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.